பல்வேறு கருத்துக்களை ஆர்வமாக சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேரும் சொல்லும் கருத்துக்களை எனக்குத்தெரிவித்திருந்தால், முன்கூட்டியே பதில் சொல்வதற்குத் தயாராக இருந்திருப்பேன். எனவே, தனியாக வினாக்கள் போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லா உறுப்பினர்களும் அமைச்சரிடம் வேண்டுகோளை கொடுத்துவிடுங்கள்.

புதுக்கோட்டை மாவட்டம், செவலூர் அருள்மிகு பொன்னாங்குருந்துடை அய்யனார் ஆலய திருப்பணி.

58—(*வினா எண். 10183) திரு த. புஷ்பராஜ்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் செவலூர் அருள்மிகு பொன்னாங்குருந்துடை அய்யனார் ஆலயம் திருப்பணி எப்போது முடியும்?

(ஆ) இத்திருக் கோயிலுக்கு அறநிலையத் துறை மூலம் எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. வி. வி சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம் செவலூர் அருள்மிகு பொன்னுங்குருந்துடை அய்யனார் ஆலயத் திருப்பணி முடிக்க ஏறக்குறைய ஓராண்டு (அக்டோபர் 1987) ஆகும்.

(ஆ) ரூ. 75,000 வணிகவரி மற்றும் அறநிலையத்துறையால் அரசு மானியமாக வழங்க 29–10–1985இல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் புதிய மாவட்டங்களில் மாவட்டத் தொழில் மையம் அமைத்தல்.

59—(*வினா எண்.994) திரு டி. ஆர். வேங்கடரமணன் மற்றும் திரு. என். எஸ். வி. சித்தன்: : மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மற்றும் புதிதாக துவங்கிய மாவட்டங்களிலும் மாவட்டத் தொழில் மையம் அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது?